ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## பதினோராம் பத்து

### முதல் திருமொழி - குன்றமொன்று
### பிரிவாற்றாத தலைவி இரங்கிக் கூறும் பாசுரம்

** குன்றம் ஒன்று எடுத்து ஏந்தி * மாமழை
அன்று காத்த அம்மான் ** அரக்கரை
வென்ற வில்லியார் * வீரமே கொலோ? *
தென்றல் வந்து * தீ வீசும் என் செய்கேன்? 1

காரும் வார் பனிக் * கடலும் அன்னவன் *
தாரு மார்வமும் * கண்ட தண்டமோ? **
சோரு மாமுகில் * துளியினூடு வந்து *
ஈர வாடை தான் * ஈரும் என்னையே 2

சங்கும் மாமையும் * தளரும் மேனி மேல் *
திங்கள் வெங்கதிர் * சீறும் என் செய்கேன்? **
பொங்கு வெண்திரைப் * புணரி வண்ணனார் *
கொங்கலார்ந்த தார் * கூவும் என்னையே 3

அங்கோர் ஆய்க்குலத்துள் * வளர்ந்து சென்று *
அங்கோர் தாய் உருவாகி வந்தவள் **
கொங்கை நஞ்சு உண்ட * கோயின்மை கொலோ? *
திங்கள் வெங்கதிர் * சீறுகின்றதே 4

அங்கோர் ஆள் அரியாய் * அவுணனை *
பங்கமா * இரு கூறு செய்தவன் **
மங்குல் மாமதி * வாங்கவே கொலோ? *
பொங்கு மாகடல் * புலம்புகின்றதே 5

சென்று வார் சிலை வளைத்து * இலங்கையை *
வென்ற வில்லியார் * வீரமே கொலோ? **
முன்றில் பெண்ணை மேல் * முளரிக் கூட்டகத்து *
அன்றிலின் குரல் * அடரும் என்னையே 6

பூவை வண்ணனார் * புள்ளின் மேல் வர *
மேவி நின்று நான் * கண்ட தண்டமோ? **
வீவில் ஐங்கணை * வில்லி அம்பு கோத்து *
ஆவியே * இலக்காக எய்வதே! 7

மால் இனம் துழாய் * வரும் என் நெஞ்சகம் *
மாலின் அந்துழாய் * வந்து என்னுள் புக **
கோல வாடையும் * கொண்டு வந்ததோர் *
ஆலி வந்ததால் * அரிது காவலே 8

கெண்டை ஒண்கணும் துயிலும் * என் நிறம்
பண்டு பண்டு போல் ஒக்கும் ** மிக்க சீர்த்
தொண்டர் இட்ட * பூந்துளவின் வாசமே *
வண்டு கொண்டு வந்து * ஊதும் ஆகிலே 9

** அன்று பாரதத்து * ஐவர் தூதனாய் *
சென்ற மாயனைச் * செங்கண் மாலினை **
மன்றில் ஆர் புகழ் * மங்கை வாட்கலி
கன்றி * சொல் வல்லார்க்கு * அல்லல் இல்லையே 10

**அடிவரவு:** குன்றம் காரும் சங்கு அங்கோராய் அங்கோராளரி சென்று பூவை மால் கெண்டை அன்று குன்றமெடுத்து

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---